ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1286/18 - 2003 මැයි 02 වැනි සිකුරාදා - 2003.05.02

1286/18 ஆம் இலக்கம் - 2003 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

கட்டளை இல. 1

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபைச் சட்டம்

10 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவின் கீழுள்ள அதிகாரங்களினைக் கொண்டு, பின்வரும் கட்டளைகளை திரவப் பெற்றோலியத் துறையிலுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை விடுக்கிறது :-

(1) திரவப் பெற்றோலிய வாயுவை நிரப்புவதற்கு அல்லது மீள நிரப்புவதற்கு எந்த நுகர்வோனாலும் வழங்கப்படும் தனது வெற்று திரவப் பெற்றோலிய வாயு சிலிண்டரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) அவ்வாறான சிலிண்டர்களுக்கு திரவப் பெற்றோலிய வாயுவை நிரப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(3) சிலிண்டருக்குள் நிரப்பப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுவை எந்த ஒரு நுகர்வோனுக்கும் அதே கொள்ளளவுடன் எந்த ஒரு தயாரிப்பிலேனும் விற்பனை செய்தல் வேண்டும்.

(4) குறிப்பிட்ட சிலிண்டரில் திரவப் பெற்றோலிய வாயுவை நிரப்பிய அல்லது மீள நிரப்பிய உற்பத்தியாளர் அல்லது வர்த்தகரின் பெயர், குறிப்பிட்ட சிலிண்டரில் பொறிக்கப்படுதல் வேண்டும்.

(5) இலங்கைத் தரக்கட்டளைகள் நிறுவனத்தின் நியமங்கள் மற்றும் செயல்விதிகளுக்கமைய திரவப் பெற்றோலிய வாயு நிரப்பப்படுதல் அல்லது மீள நிரப்பப்படுதல் மற்றும் விற்பனை செய்தல் என்பன இடம்பெற வேண்டும்.

அதிகாரசபையின் உத்தரவுகளுக்கமைய,

ஆர். ஐ. விமலசேன,
தலைவர்,
நுகர்வோர் விவகார அதிகார சபை.

கொழும்பு,
2003, மே 02.

5-369

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.